1968 மார்ச் 23]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பட்டாதார்கள் அரிசன மக்களுக்கு நிலம் தருகிறேன் என்று ஒப்புக்கொண்டு முன் வந்திருப்பதாக தகவல் இதுவரையிலும் இருக்கவில்லை. அரிசனங்களுக்குக் கொடுப்பதற்கு பட்டா நிலங்களை ஆர்ஜிதம் செய்தால், பட்டாதார்கள் வழக்கு மன்றங்களில் வழக்குத் தொடுத்து, இன்றைக்கு ஏராளமான வழக்குகள் இருக்கின்றன. கனம் உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல், யாராவது கொடுக்க முன்வந்தும், அதை எடுக்கவில்லை என்ற குறை இருக்குமானல், அரசுக்குத் தெரிவிப்பார்களேயானல், நடவடிக்கை எடுக்கலாம்.

தொழிலாளர் அரசு காப்புறுதித்திட்டம்

*303 வின—**திரு. வி. கே. கோதண்டராமன், திரு. நா. மருதாசலம் :** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊழியர் அரசாங்க இன்சூரென்ஸ் திட்டத்தின் (Employee State Insurance Scheme) கீழ் வந்துள்ளவர்களின் குடும்பத்தினருக்கும் வைத்திய வசதி அளிக்கும் திட்டம் ராஜ்யம் பூராவும் உள்ளதா ?

(இ) ஆமெனில் அவைகள் எந்தெந்தப் பகுதிகளில் உள்ளன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தொழிலாளர் அரசாங்கக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் காப்புறுதி செய்துகொண்டவர்களின் குடும்பங்களுக்கு மருத்துவ வசதியளிக்கும் ஏற்பாடு இம்மாநிலம் முழுவதற்கும் விரிவுபடுத்தப்படவில்லை.

(இ) காப்புறுதி செய்துகொண்டவர்களின் குடும்பங்களுக்கு மருத்துவ வசதியளிப்பதற்காக மேற்படித் திட்டம் கீழ்க்காணும் இடங்களுக்கு மட்டுமே விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

1. சேலம்.
2. திருச்சிராப்பள்ளி.
3. காவேரி நகர்.
4. திண்டுக்கல்.
5. திருப்பூர்.
6. உடுமலைப்பேட்டை.
7. சிவகாசி.
8. இராஜபாளையம்.
9. விருதுநகர்.
10. திருநெல்வேலி.
11. செங்கோட்டை.
12. புதுக்கோட்டை.
13. நாகப்பட்டினம்.
14. கும்பகோணம்.
15. மேட்டுப்பாளையம்.
16. ஈரோடு.
17. பொள்ளாச்சி.
18. குடியாத்தம்.
19. வாணியம்பாடி.
20. வேலூர்.
21. நாகர்கோவில்.
22. ராணிப்பேட்டை.
23. டால்மியாபுரம்.
24. மேட்டூர் அணை.
25. சென்னை மாநகரமும் அதன் சுற்றுப்புறமும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1968 மார்ச் 23

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக எல்லா ஊழியர்களுடைய குடும்பத்திற்கும் அது போன்ற மருத்துவ சிகிச்சை கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர்களுடைய கேள்வி எனக்குப் புரியவில்லை. தொழிலாளர்களுக்கு இந்தத் திட்டம் எங்கெங்கே இருக்கிறதோ அங்கு எல்லோருக்கும் உண்டு. இந்தத் திட்டம் எங்கெங்கே விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது என்பது கேள்வி. நான் குறிப்பிட்ட இடங்களில் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு எங்கெங்கே விரிவுபடுத்த வேண்டுமோ ஆங்காங்குள்ள மருத்துவ வசதிகளுக்கு ஏற்ற வாறு அரசு முடிவு செய்து விரிவுபடுத்தும்.

திரு. என். மருதாசலம் : சார், கோயம்புத்தூரில் இந்த இன்ஷூரன்ஸ் திட்டத்தின் கீழ் வரக்கூடிய தொழிலாளர்களுடைய குடும்பங்களுக்கும் வைத்திய வசதி செய்து கொடுக்க உத்தேசம் உண்டா ? அப்படி உத்தேசம் இருந்தால், தக்க நடவடிக்கை எடுத்து இருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கோயம்புத்தூரில் விரைவில் இந்தத் திட்டம் அமுல் நடத்தப்பட வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்கான இந்த இன்ஷூரன்ஸ் திட்டம் நல்ல முறையிலே இயங்க ஆஸ்பத்திரிகள் கட்டப்படுகின்றன. ஆனால், மதுரையில், பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழித்துக் கட்டப்பட்ட ஆஸ்பத்திரி உபயோகத்துக்கு வராமல் அது இன்ஃபெக்ஷஸ் டிஸீஸஸ் ஆஸ்பத்திரிக்குப் பக்கத்தில் கட்டப்பட்டு இருப்பதால், அந்த இன்ஃபெக்ஷஸ் டிஸீஸஸ் ஆஸ்பத்திரியை அப்புறப் படுத்தாமல் இருப்பதால், அந்தத் தொழிலாளர்களுக்கான ஆஸ்பத்திரி உபயோகத்திற்குக் கொண்டுவரப்படாமல் இருக்கிறது. இந்தக் குறையை விரைவில் நீக்கி, அந்த ஆஸ்பத்திரியை தொழிலாளர்களுடைய நன்மையைக் கருதி, உடனடியாக உபயோகத்திற்குக் கொண்டுவர அரசு தக்க முறையில் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மருத்துவ வசதியை அதிகப்படுத்த அதிகப்படுத்த குடும்பங்களுக்கும் விரைவில் செயல்படுத்தப்படுகிறது. இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டவுடன், 143 லட்ச ரூபாய் செலவழிக்கப் பட்டிருக்கிறது. இன்னும் 178 லட்சம் ரூபாய் செலவழிக்கலாம் என்று திட்டமிட்டிருக்கிறோம். மருத்துவ விடுதி கட்டக்கூடிய அளவில், கிட்டத் தட்ட 292 லட்ச ரூபாய்க்குக் கட்ட முடிவு செய்திருக்கிறோம். இப் பொழுது 213 லட்ச ரூபாய்க்குத் திட்டம் நிறைவேற்றும் முயற்சியில் ஈடு பட்டிருக்கிறோம். கிட்டத்தட்ட 677 லட்ச ரூபாய்க்கு திட்டம் தயாராகிக் கொண்டு இருக்கிறது.

மதுரை சம்பந்தப்பட்ட வரையில், ஏற்கனவே ஒரு சிறிய தவறு நடந்திருக்கிறது. ஐ.டி. ஆஸ்பிடலை வேறு இடத்திற்கு மாற்றுவது பற்றி ஒரு முடிவு எடுக்காமலேயே, அதன் பக்கத்திலே காலி இடம் இருந்தது என்பதால், அங்கே இந்த இ.எஸ்.ஐ.ஆஸ்பத்திரியைக் கட்டி, அதற்குப் பின்னால், இந்த ஐ.டி. ஆஸ்பத்திரியையும் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியையும் இணைத்துச் செயல்படுவது என்றும் செய்தார்கள். அதற்குப் பின்னால், இந்த ஐ.டி. ஆஸ்பத்திரியை 12 மைலுக்கு அப்பால் மாற்றுவது என்றும், முன்னால் இருந்த அரசு முடிவு செய்தது. அதை நிறைவேற்றும்போது, அங்கே உள்ள மக்களிடத்திலிருந்து எதிர்ப்பு வந்ததால், மேலே ஒன்றும் செய்யாமல் போய்விட்டார்கள். இப்பொழுது இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியைப் பொறுத்த வரையில், மத்திய சர்க்காரிலிருந்து நாங்கள் இதற்குப் பணம் கொடுத்தோமே, கட்டாயம் அந்த ஹாஸ்பிடலை உபயோகத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்துகிறார்கள். அதைப் பற்றி, மதுரை மாநகரில் உள்ள மக்களை அழைத்து, முன்னால் தவறு நடந்துவிட்டது, ஆனால் அந்தத் திட்டத்தை வீணாக்கக் கூடாது, இடைக்கால ஏற்பாடாக—புதிதாக ஐ.டி ஹாஸ்பிடலுக்கு ஒரு மருத்துவ விடுதி

1968 மார்ச் 23]

அமைக்கும் வரை—இதை மாற்ற ஒத்துக்கொள்ளுங்கள், என்று அந்த நகர மக்களுக்கு எடுத்துச் சொல்லி, அப்படி அந்த மக்கள் ஐ.டி. ஹாஸ்பிடலுக்குப் போக இரண்டு வான்களை அரசாங்கம் தருவதற்குத் தயாராக இருக்கிறது என்று சொல்லி சமாதானப் படுத்தியிருக்கிறோம். விரைவில் அந்த முயற்சி வெற்றி பெறும் என்றும், இந்த ஐ.டி. ஆஸ்பத்திரியை மாற்றி, இ.எஸ்.ஐ. திட்டம் துவங்கப்படும் என்றும் அரசாங்கம் நினைத்திருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : சார், இந்தத் திட்டம் 500 பேர்களுக்குக் குறைவாக இருந்தால் அமுல்படுத்துவதில்லை. ஒரு 5 பேர்கள் குறைவாக இருந்தாலும் திட்டத்தை இப்பொழுது அமுல்படுத்துவது இல்லை. ஆகவே குறைந்த எண்ணிக்கை உள்ள இடங்களிலும் அமுலாக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : இந்தத் திட்டம் எந்த எந்த இடங்களுக்கு நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்கான விதிமுறைகள் இருக்கின்றன. 1,500-க்கு மேல் இருக்கும் இடங்களை முதன் முதலாக எடுக்கிறோம். கொஞ்சம் கொஞ்சம் வசதிகள் அதிகமாக ஏற்படும்போது எல்லா இடங்களுக்கும் விரிவுபடுத்துவோம்.

திரு. சு. துரைசாமி : அமைச்சரவர்கள் பதில் கூறும்போது, கோவைப் பகுதிக்கு விரைவில் கொண்டுவரப்படும் என்று சொன்னார்கள். உத்தேசமாக எவ்வளவு நாட்களில் விரிவுபடுத்தப்படும் என்பதை அறிவிக்க முடியுமா ? அதோடு, கோவையில் இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகள் கட்டுகிறார்கள். தொழிலாளர்கள் குடும்பங்களும் மருத்துவ வசதி பெறும் என்கிற ஏற்பாட்டைச் செய்யமுடியுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்முடைய மருத்துவத் துறை அமைச்சர் ஆர்வம் காட்டி, உடனடியாக அந்த நகரத்திற்கு விரிவு படுத்த, இடைக்கால ஏற்பாடாக ஏதாவது கட்டடம் கிடைக்குமா என்றும் முயற்சிக்கிறார்கள். இப்பொழுது கட்டப்படும் கட்டடத்தை நானே பார்த்தேன். ஒரு பகுதி முடிவு பெற வேண்டும். அதிலே லாண்ட் அக்விஷிஷன் தகராறு இருக்கிறது. சம்பந்தப்பட்டவர்களோடு கலந்து பேசி உடனடியாக முடிவு எடுத்தால் விரைவில் திட்டம் அமுலுக்கு வரும்.

திரு. எஸ். அக்னிராஜு : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் மருத்துவ மனை கட்டி, ஆரம்பிக்க நாளாகின்றது. ஆகவே, இடைக்கால ஏற்பாடாக, "மொபைல் வான்" களைத் தொழிலாளர்களுடைய இல்லங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்ய முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுதே மொபைல் வான்கள் அனுப்புவது என்று திட்டத்தில் இருக்கிறது. கிட்டத்தட்ட 73 மொபைல் டிஸ்பென்சரிகள் இருக்கின்றன. குடும்ப திட்டம் விரிவு ஆகும்போது, மருத்துவ விடுதி நல்ல முறையில் அமையும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், தொழிலாளர்களிலே ஆண்களும், பெண்களும் இருக்கிறார்கள். இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகளில் பெரும்பாலும் ஆண் டாக்டர்களை மாத்திரம் தான் நியமிக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் ஆண்டாக்டர்களும், பெண் டாக்டர்களும் கலந்து நியமிக்கப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எங்கெங்கு பெண் மருத்துவர் தேவையோ, அங்கெல்லாம் அப்படி நியமிக்கப்படும்.

மேலூர், நத்தம் சாக்கடை அமைப்புத் திட்டங்கள்.

*304 வினா — **திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா —